DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.03/2025 |
| Deposition of witness | : | P.W. 1 |
| Name | : | நாகவள்ளி |
| Father's /Husband Name | : | வெங்கடாஜலபதி |
| Village | : | அட்டமங்கலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 51 |
| Occupation | : | வீட்டுக்குடித்தனம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 06th day of May 2025.
A1, A2 Present. A3 produced from Judicial custody.

**முதல் விசாரணை:-**

நான் அட்டமங்கலம் குடியானத் தெருவில் வசித்து வருகிறேன். எனது மகள் யோகப்பிரியாவை விழுப்புரத்தில் திருமணம் செய்து கொடுத்துள்ளோம். தற்போது எனது மகள் திருச்சியில் வசித்து வருகிறார். கடந்த 17.09.2023 ம் வருடம் அட்டமங்கலம் குடியானத்தெருவில் எங்களது வீட்டை பூட்டிவிட்டு திருச்சியில் உள்ள எனது மகள் யோகப்பிரியாவை பார்ப்பதற்காக நானும் எனது கணவர் மற்றும் மகனுடன் சென்றிருந்தேன். 25 ம் தேதியன்று எனது வீட்டை எனது பக்கத்து வீட்டில் வசிக்கும் மணிமாலா என்பவர் போன்மூலம் எனது வீட்டின் பின்பக்க கதவு உடைக்கப்பட்டு திறந்து கிடப்பதாக கூறினார். நான் உடனே ஊருக்கு வந்து எனது வீட்டின் கதவை திறந்து பின்பக்க கதவை பார்த்த போது உடைக்கப்பட்டு திறந்து கிடந்தது. வீட்டில் பீரோவில் இருந்த துணிமணிகள் கலைக்கப்பட்டு கீழே கிடந்தது. எனது வீட்டில் பொருள் எதுவும் திருட்டு போகவில்லை. இது சம்மந்தமாக குடவாசல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு நான் கொடுத்ததுதான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் எனது வீட்டின் பின்பக்க கதவை உடைத்து திருட முயற்சித்தது குருவி குரூப் என்று போலீசார் தெரிவித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவத்தை பொறுத்து போலீசாரிடம் அலைபேசி மூலமாக தகவல் கூறினேன் என்றால் சரிதான். சம்பவத்தன்றே புகார் கொடுத்து விட்டேன் என்றால் சரிதான். புகார் நான் கொடுக்கவில்லை என்றாலும் அதில் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் புகார் கொடுத்த பிறகு போலீசார் சம்பவயிடத்திற்கு வந்து விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். கைரேகை நிபுணர்கள் அல்லது மோப்ப நாய்கள் சம்பவயிடத்திற்கு அழைத்து வந்தார்களா என்றால் கைரேகை நிபுணர்கள் மட்டும் வந்தார்கள். ஆஜர் எதிரி தான் சம்பவத்தில் ஈடுபட்டார் என்று புகாரில் குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்து 10 நாட்கள் காலதாமதமாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் நான் ஊருக்கு சென்றுவிட்டு வந்து புகார் கொடுத்தேன்.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
Date: 2025.05.06 03:26:17 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal

`